www.Padasalai.Net www.TrbTnpsc.com

# மூன்றாம் இடைப்பருவத் தேர்வு - 2023

## எட்டாம் வகுப்பு

நேரம் : 1.30 மணி | தமிழ் | மதிப்பெண்கள் : 50

பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:- 7×1=7

1) ஒன்றே ________ என்று கருதி வாழ்வதே மனிதப் பண்பாகும்

அ) குலம் ஆ) குளம் இ) குணம் ஈ) குடம்

2) ஞானியார் சிறந்த கருத்துகளை மக்களிடம் ________

அ) பகர்ந்தனர் ஆ) நுகர்ந்தனர் இ) சிறந்தனர் ஈ) துறந்தனர்

3) உள் இருக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________

அ) உள்ளேயிருக்கும் ஆ) உள்ளிருக்கும் இ) உளிருக்கும் ஈ) உளருக்கும்

4) அயோத்திதாசர் ________ சமூகச்சீர்திருத்தத்தின் தந்தை என்று போற்றப்படுகிறார்.

அ) தமிழக ஆ) இந்திய இ) தென்னிந்திய ஈ) ஆசிய

5) முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ________

அ) எதுகை ஆ) இயைபு இ) அந்தாதி ஈ) மோனை

6) பூனா ஒப்பந்தம் ________ மாற்ற ஏற்படுத்தப்பட்டது

அ) சொத்துரிமையை ஆ) பேச்சுரிமையை

இ) எழுத்துரிமையை ஈ) இரட்டை வாக்குரிமையை

7) இரட்டுற மொழிதல் அணியின் வேறு பெயர் ________ அணி

அ) பிறிதுமொழிதல் ஆ) வேற்றுமை இ) உவமை ஈ) சிலேடை

பகுதி - ஆ

II. 1) பொருத்துக. 3×1=3

1. நிறை - பொறுமை
2. பொறை - கொள்கை
3. மதம் - மேன்மை

2) கலைச்சொல் அறிவோம். 2×1=2

அ) Saint ஆ) Objective

பகுதி - இ

III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 4×2=8

1) யாருக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை?

2) அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?

3) அந்தாதி என்றால் என்ன?

4) தோல்வி எப்போது தூண்டுகோலாகும்?

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

5) அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக்கொண்டார்?

6) நண்பர்களின் இயல்பை அளந்துகாட்டும் அளவுகோல் எது?

7) இரு வினாக்களுக்கும் ஒரு விடை தருக.

அ) ஆடை நெய்வது எதனாலே? ஆ) அறிவைப் பெறுவது எதனாலே?

பகுதி

IV. அடிமாறாமல் எழுதுக. 2+3=

1) தொடர்பு என முடியும் குறளை எழுதுக.

2) ஒன்றே குலம் என்ற பாடலை அடிமாறாமல் எழுதுக.

ஒன்றே குலம் முதல் ..... உய்ம்மினே வரை.

பகுதி - உ

V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. 2×4=8

1) அன்றாட வாழ்வில் நாம் பிறருக்கு எத்தகைய உதவிகளைச் செய்யலாம்?

2) குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுவன யாவை?

3) அயோத்திதாசனின் இதழ்ப்பணி பற்றி எழுதுக.

4) தான் என்பது ஒருமையைக் குறிக்கும். தாம் என்பது பன்மையைக் குறிக்கும். இவ்வேறுபாட்டினை அறிந்து இரு தொடர்கள் அமைக்க.

பகுதி - ஊ

VI. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. 2×5=10

1) இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை?

2) மனிதர்களிடம் குவிந்திருக்கும் பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுவன யாவை?

3) பிறிதுமொழிதல் அணியை விளக்கி எடுத்துக்காட்டுத் தருக.

4) விபத்தில்லா வாகனப் பயணம் மேற்கொள்ளும்போது நாம் கடைபிடிக்கும் செயல்கள் யாவை?

பகுதி

VII. எவையேனும் ஒன்றிற்கு பதில் அளிக்க. 1×7=7

1) குழந்தைகளின் நற்பண்புகளாகப் 'பால்மனம்' கதையின் வழி நீங்கள் அறிந்தனவற்றைத் தொகுத்து எழுதுக.

2) புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com